30th June 1962]

தேவஸ்தான மடங்களின் நிலங்கள் (குத்தகை விடுதல்).

*60 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேவஸ்தானம் மற்றும் மடாலயங்கள் பண்ணைக்கு விட்டிருக்கும் நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு அரசாங்கமே விவசாயிகளுக்குக் குத்தகை விடும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No. Sir.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, தேவஸ்தானம் மடம் போன்றவைகளுடைய பண்ணை நிலங்களையெல்லாம் பினாமி குத்தகைக்கு எழுதிக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பற்றி ஏற்கெனவே சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் இப்பொழுது அமுலுக்கு வந்திருக்கிறது. அதன்படி ஏதாவது தவறுகள் நடந்தால் அதைப்பற்றி எல்லாம் கவனிக்கப்படும்.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள்: கோவில்கள் தேவஸ்தானங்களின் நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டாலும்கூட அவைகளை கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு முன் இருந்த சட்ட மன்றத்தில் அங்கத்தினராகத்தான் இருந்தார். அப்பொழுது சட்டம் செய்யப்பட்டது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஏற்கனவே செய்யப்பட்ட சட்டத்தில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதற்கு இடம் இருக்கிறது என்பதும் தெரியும்.

திரு. கோ. சி. மணி: சட்டத்தில் இருப்பது மிராசுதார்களுக்குத் தெரிந்தும் அவர்கள் பினாமியாக குத்தகை சீட்டு வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தச் சட்டம் இப்பொழுதுதான் அமுலுக்கு வந்திருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்து அதற்கு பிறகுதான் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசரைக் கூட நியமித்திருக்கிறார்கள். அவர் மூலம் இதையெல்லாம் கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? குறைந்த பட்சம் இந்தச் சட்டத்தின்கீழ் இயற்ற வேண்டிய விதிகள் எல்லாம் இயற்றப்பட்டு விட்டனவா? அப்படியிருந்தால்

அவை இன்னும் சட்டசபை முன் வைக்கப்படவில்லையே. சட்டம் அங்கிகாரம் ஆவதற்குக் கால தாமதம் ஆனாலும் கூட விதிகளை இயற்றி அதை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கலாமே? அப்படி விதிகள் இயற்றப்பட்டுவிட்டனவா? அதன் விதிகள் எப்பொழுது சபையின் அங்கீகாரத்திற்கு வரும்? அதன் பிறகு எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டம் அங்கிகாரம் அடைவதற்கு கால தாமதம் ஆகி விட்டது. இப்பொழுதுதான் அமுலுக்கு வந்திருக்கிறது. இனிமேல் தான் அதற்கு வேண்டிய விதிகள் இயற்றப்பட்டு அவைகளை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. கே. டி. கோசல்ராம்: இந்தச் சட்டம் வருகிறது என்று தெரிந்துகொண்டு நிலச்சொந்தக்காரர்கள் பிரமியாக பல மடாதிபதிகள் உள்பட குத்தகைச் சீட்டுகள் எழுதி வாங்கி வருகிறார்கள். அதனால், இந்தச் சட்டம் இந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று குடியானவர்களுக்கு பலன் கிடைக்கும் அளவில் சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டத்தின் கீழ் குடியானவர்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்பது இல்லை. ஆனால் குடியானவர்கள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யலாம் என்றும் அவற்றில் கவனம் செலுத்தலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கனம் தலைவர் அவர்களே, சில தேவஸ்தானங்களின் நிலங்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய கொடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சில இடங்களில் விவசாயிகளால் குறித்த அளவுப்படி தானியங்களை அளக்க முடியவில்லை. அதனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தைத் திருப்பி வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அநேக விவசாயிகள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதால் அவர்களால் குத்தகைப்படி அளக்கமுடியவில்லை. அதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே எந்த அளவு அவர்களால் கொடுக்க முடியுமோ அந்த அளவு கொடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா? அவ்விதம் நடவடிக்கை எடுத்து நல்ல முறையில் கூட்டுறவுப் பண்ணை விவசாயம் நடப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கூட்டுறவு சாகுபடி முறையாக இருந்தாலும் வேறு எந்த முறை சாகுபடியாக இருந்தாலும் குத்தகைப்படித்தான் அளக்க வேண்டும். இயற்கையின் கோளாறினால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு வஜா செய்யப்படும். அதற்கு தனிப்பட்ட முறையில் நிவாரணம் பெறலாம். ஆனால் குத்தகைப்படித்தான் அளக்கவேண்டும்.

30th June 1962]

திரு. கே. டி. கோசல்ராம்: புதிய சட்டத்தின் நோக்கம் மடாதிபதிகளும், கோவில் தேவஸ்தானங்களும் குறிப்பிட்ட அளவு தான் நிலம் வைத்துக்கொள்ள வேண்டும், மற்றவற்றை குடியான வர்களுக்கு விவசாயம் செய்வதற்குக் கொடுத்துவிடவேண்டும் என்பதற்காகத்தானே கொண்டுவரப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படிச் சொல்வது சரியல்ல. கூட்டுறவு முறைக்காகவே கொண்டுவரப்பட்டது என்பது அல்ல, இந்த நிலங்கள் சரியாகச் சாகுபடி செய்யப்படவேண்டும், உழைத் துப் பயிரிடுகின்ற விவசாயிகள் சுரண்டப்படக் கூடாது என்பது தான் லட்சியம்.

திரு. க. ர. நல்லசிவம்: தேவஸ்தான நிலங்கள் சம்பந்தமாக கூட்டுறவு முறையில் நிலம் கொடுக்கவேண்டுமென்று இல்லாவிட்டா லும் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு யோசனை சொல்லவோ யோசனை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் கட்டாயமாக கூட்டுறவு முறையில் கொண்டுவர சட்டத்தைத் திருத்த சர்க்கார் தயாராக இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டத்தை ஒன்றும் திருத்த வேண்டியதில்லை. தனிப்பட்ட நபர்களுக்கு 5 எக்கருக்கு மேல் கொடுக்கக் கூடாது என்பதுதான் இந்தச் சட்டம். தனிப்பட்ட நபர்கள் தனியாகச் சாகுபடி செய்வதைவிட கூட்டுறவு இயக்கத் தின்கீழ் சாகுபடி செய்வதுதான் நல்லது. நல்ல முறையில் சாகுபடி செய்வதற்கும், கூட்டுறவுமுறையில் கிடைக்கும் எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். இதைப்பற்றித்தான் நான் முன்பு கூறினேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கூட்டுறவுப் பண்ணைகள் 70-வது பசலிக்குச் சரியாகக் கொடுத்துவிட்டார்கள். சென்ற ஆண்டு வெள்ளம் வந்ததன்காரணமாக 71-வது பசலிக்குத்தான் சரியானபடி நெல் அளக்க முடியாமல் போய்விட்டது. இதனால் பல சொஸைடிகள் சிரமப்படுகின்றன. அதிகாரிகளால் குத்தகை வஜா செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே இது விஷயத்தை அரசாங்கமே கவனித்து வஜா செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் இதுபற்றி அதிகாரிகளுக்கும் எழுதி, எனக்கும் எழுதினால் பரிசிலனை செய்து பார்த்துக் கவனம் செலுத்தலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நபர் ஒருவர் 5 எக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்கிற விஷயமாக நிர்வாகத்துறை நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு எடுக்கப்படும். இந்தச் சட்டத்திற்கான விதிகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

[30th June 1962

திரு. க. கோமதி சங்கர தீக்ஷதர் : தலைவர் அவர்களே! எங்கள் பக்கத்தில் திருவாடுதுறை மடத்தில் பயிர் செய்யும் விவசாயிகள் ஆயிரக்கணக்கான ரூபாய் பணத்தைக் கொடுத்து பயிரிடும் உரிமையை வாங்கி நிலத்தில் இருந்து அப்புறப்படுத்துகிறார்கள். இதில் மடத்து அதிகாரிகளும், மற்றவர்களும் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உடனடியாக இந்தச் சட்டத்தை அமுல் செய்யும்படி கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தச் சட்டம் கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று நான் கூறினேன்.

அணைகட்டுதல் (அய்யம்பாளையம்)

* 61 கேள்வி.—**திரு. வ. ச. சு. மணி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், அய்யன்பாளையம் மலையடிவாரத்தில் இருந்துவரும் நதியின் தண்ணீரை அணை கட்டி தேக்கி பாசனவசதி செய்ய அரசாங்கத்திற்கு உத்தேச முண்டா ?

THE HON. SRI P. KAKKAN : There is no such proposal, Sir.

திரு. வ. ச. சு. மணி : இந்த அணைக்கட்டுத் திட்டமானது 1957-ல் வந்தது. என்ஜினியர் முதற்கொண்டு இதைப் பரிசீலனை செய்து இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் சாகுபடி செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may please put his supplementary in the form of a question, instead of making a speech.

திரு. வ. ச. சு. மணி : 1957-ல் கொண்டுவந்த திட்டம் ஏன் கைவிடப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் சொன்ன பதிலில் அத்தகைய ஒரு திட்டமே கிடையாது என்று சொன்னேன். கைவிடப்பட்டது என்று சொல்லவில்லை.

திரு. வ. ச. சு. மணி : அந்தமாதிரி ஒரு திட்டம் 1957-ல் இருந்தது . . . .

கனம் சபாநாயகர் : அதைக் குறித்து நீங்கள் எழுதி அனுப்புங்கள்.

Sandalwood trees (Salem)

*62. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the sandalwood trees in the forest of North Salem have been attacked by any disease; and